අමාත්‍යාංශ , දෙපාර්තමේන්තු, පළාත් සභා සහ පළාත් පාලන ආයතනවලට
අදාළ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කමිටුව මගින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන
වාර්තා සම්බන්ධයෙන් ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ සහ
ගන්නා පියවර ඉදිරිපත් කිරීම

அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
நிறுவனங்களுக்கான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின்
மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக
நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள்
மற்றும் மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைளைச் சமர்ப்பித்தல்

Presenting the actions taken and observations made by the Minister in charge of institutions regarding the reports submitted to the Parliament by the Committee on Public Accounts related to Ministries/Departments/Provincial Councils and Local Government Institutions

2021 වර්ෂය
2021 ஆம் ஆண்டு
Year – 2021

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - මහනුවර
மாவட்ட செயலகம் – கண்டி
District Secretariat - Kandy

**<u>அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைளைச் சமர்ப்பித்தல் .</u>**

**பாராளுமன்றதொடர் இலக்கம் - 290**

**மாவட்ட செயலகம் - கண்டி (செலவினத் தலைப்பு-258)**

| அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலமாக மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|
| <u>1 ஆம் பிரிவு</u><br>2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் 11.1 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்குள் நி.பி. 756(6) இற்க்கு அமைய தொகை மதிப்பீடு செய்து குறித்த தினத்தில் அவ் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. | 2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் 11.1 ஆம் அத்தியாயத்திற்கு அமைய மாவட்ட செயலகத்தில் மற்றும் 20 பிரதேச செயலகங்களிலும் 2021 ஆம் ஆண்டிற்கான தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்து KDS/2/6/6/4 குறித்த எனது இலக்கமுடைய மற்றும் 2022.02.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் 2022.02.23 ஆம் திகதி அரச கணக்காய்வுக் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்ச்சியாக குறித்த அலுவல் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, பின்னூட்டல் செய்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களில் குறித்த விடயம் கலந்துரையாடலுக்கு பாத்திரமாகும். | 2022 ஆம் ஆண்டிற்கான தொகை மதிப்பீட்டு அறிக்கை KDS/2/6/6/1 குறித்த எனது இலக்கமுடைய மற்றும் 2023.02.27 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அரச கணக்காய்வுக் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு 2023 ஆம் ஆண்டிற்கான தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டு பொது 47 அறிக்கையின் அலுவல்கள் இடம் பெறுகின்றது. |

| | | |
|---|---|---|
| 2013.12.29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வாகனங்களின் எரிபொருள் சுடுதல் தொடர்பான பரிசீலனை மேற்க்கொள்ளாமை | 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிறுதி வரையில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் பரிசீலனை மேற்க்கொள்வதற்க்காக வாகனங்களில் எரிபொருள் தாங்கியை பூரணமாக நிரப்புவதற்கு போதியளவு எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை நிலவியது. ஆகையால் எரிபொருள் சுடுதல் தொடர்பான பரிசீலனை மேற்க்கொள்ள இயலவில்லை அத்தோடு நாட்டில் நிலவிய பல்வேறு சூழ்நிலைகளினால் சிறிது தாமதம் ஏற்படினும் 2023 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் மாவட்ட செயலகத்திற்குரிய எட்டு (8) வாகனங்களினதும் எரிபொருள் சுடுதல் தொடர்பான பரிசீலனை மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. | தற்போது மாவட்ட செயலகத்திற்குரிய எட்டு (8) வாகனங்களிற்கும் 2023 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் சுடுதல் தொடர்பான பரிசீலனை மேற்க்கொள்ளப்பட்டுள்ளமையினால் 2024 ஆம் ஆண்டிற்குரிய பரிசீலனையை 2024 ஆம் ஆண்டின் இறுதி காலண்டிற்கு முன்னர் செய்வதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களில் வாகன செலவறிக்கையை பகுப்பாய்வு செய்து இந்நிலமை மேற்பார்வை செய்யப்படும். |
| ஒரு வருடத்திற்கு மேற்ப்பட்ட காலமாக நிலுவைக் கடன் மிகுதிகள் காணப்படல் | **<u>பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.</u>**<br>ஆர்.எல்.ஏ.கே. பெரேரா (சாரதி)<br><br>முறையான ஒழுக்காற்று விசாரணை செய்யப்பட்டுள்ளதோடு உத்தியோகத்தர் மீள் பணிக்கமர்த்தி கமத்தொழில் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார். அதற்கமைய 2023.03.31 ஆம் திகதி பேரேட்டுக் குறிப்புக்களுக்கமைய மாதாந்த கணக்குச் சாராம்சத்தினூடாக கடன் மிகுதி சீராக்கப்பட்டுள்ளது. | **<u>பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.</u>**<br>2023 ஆம் ஆண்டிற்குரிய இணக்க அறிக்கைக்கு அமைய பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தயோகத்தர்களின் கடன் மிகுதிகள் இல்லை என்பதனைக் குறிப்பிடுகின்றேன். |

| | | |
|---|---|---|
| | **<u>சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள்.</u>**<br><br>ஆர்.ஏ. அஜித் குமார (அ.சே.உ.)<br><br>நீதிபதி ஆலோசனை பெறுவதற்காக நீதிபதிக்கு அறிக்கையிடல் | **<u>சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள்.</u>**<br><br>2024.01.06 ஆம் திகதி நீதிபதி ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதோடு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.<br>அத்தோடு, 2023 ஆம் ஆண்டு அரச ஊழியர்களின் முற்பண கணக்கு இணக்க அறிக்கையின் பிரகாரம் டீ.எஸ்.பீ. தர்மசேனஅவர்களின் (சாரதி) ஒரு வருடத்திற்கு மேற்ப்பட்ட காலமாக நிலுவைக் கடன் மிகுதிகள் காணப்படுவதோடு, அந் நிலுவையை தற்போது பிணையாளரர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகின்றது. (தற்போது நிலுவைக் கடன் மிகுதி ரூ. 107,420.00 ஆகும்.) இவ் இரு கடன் நிலுவைகளைத் தவிர வேறு கடன் நிலுவைகள் இல்லை. |
| பொது வைப்புக் கணக்கில் காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் செயற்படாமை. | காலம் கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து அவற்றைப் பட்டியல் படுத்தி குறித்த வைப்பாளர்களிடம் வினவி தக்க நடவடிக்கை மேற்க் கொள்ளப்பட்டுள்ளதோடு ஏனைய அனைத்து வைப்புக்களும் வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. | தற்போது காலம் கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பாகவும் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்க் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>➢ குறித்தவர்களுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்க் கொள்ளல்.<br><br>➢ அரச வருமானத்திற்கு வரவு வைத்தல். |

| | | |
|---|---|---|
| **<u>2 ஆம் பிரிவு</u>**<br><br>நிறுவன கணக்குகள்தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் மறுதலிப்பான மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்படல் | 2021 ஆம் ஆண்டு கணக்கு தொடர்பாக முனைப்பழியான அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளக நிருவாகத்தை மேம்படுத்தி சாதகமான கணக்காய்வுக் கருத்தொன்றைப். பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்க் கொள்ளப்படுகின்றது. | 2022 ஆம் ஆண்டு கணக்கு தொடர்பான முனைப்பழியான அபிப்பிராயம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக உள்ளக நிருவாகத்தை முறைமை படுத்தவும், வெளிப்டைத்தன்மையுடன் செயற்பட உரிய நடவடிக்கை எடுப்பதோடு பின்னூட்டலோடு சரியான மேற்பார்வையுடன் செயற்படுகின்றது. அதன் மூலம் சாதகமான கருத்தொன்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. |

மாவட்ட செயலாளர்
மாவட்டசெயலகம்
கண்டி

பிரதான கணக்காளர்
மாவட்டசெயலகம்
கண்டி

தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்

நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

லங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

**Pradeep Yasarathna**
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Goverement
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அமைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்